


**08. 06. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. ஏழை எளிய மக்களின் நலனுக்காக, தமது அரசு கடந்த 12 ஆண்டுகளாக செயலாற்றி வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்..

2. நாட்டின் 10 மாநிலங்களில் காலியாக உள்ள 24 மாநிலங்களவை உறுப்பினர் பதவி இடங்களுக்கு வரும் 18ஆம் தேதி நடைபெறும் தேர்தலுக்கான வேட்பு மனுதாக்கல் இன்று நிறைவடைகிறது.

3. நார்வே செஸ் சேம்பியன் பட்டத்தை வென்ற கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவிற்கு 50 லட்ச ரூபாய்க்கான காசோலையை முதலமைச்சர் திரு.விஜய் இன்று வழங்கி அவரை கவுரவித்தார்.

4. மத்திய அரசின் புதிய வக்ஃப் வாரிய சட்டம் தமிழகத்தில் நடைமுறைபடுத்தப்பட மாட்டாது என்று மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு.ஷாஜகான் தெரிவித்துள்ளார்.

5. சண்டிகடில் இந்தியாவிற்கு எதிரான **டெஸ்ட்** கிரிக்கெட் போட்டியில் ஆப்கானிஸ்தான் திணறி வருகிறது.

**இனிவிரிவான செய்திகள்**

************

**பிரதமர்**

தேசிய ஜனநாயக கூட்டணி தலைமையிலான மத்திய அரசு, ஆட்சி பொறுப்பேற்று, 12 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், ஏழை எளிய மக்களின் நலனுக்காக, தமது அரசு செயலாற்றியதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்திருக்கிறார்.

கடந்த 12 ஆண்டுகளில் இந்தியா மாபெரும் மாற்றங்களுடன் வெற்றிப்பாதையில் முன்னேறி செல்லும் நிலையில் பிரதமரின் ஏழைய எளிய மக்களுக்கான உணவு தானிய திட்டம் மாற்றங்களுக்கான முத்தாய்ப்பாக திகழ்ந்ததாக தமது சமூக வலைதள பதிவில் அவர் கூறியிருக்கிறார்.

வறுமை கோட்டிற்கு கீழ் மிகவும் பின்தங்கிய நலிவடைந்த மக்களின் மேம்பாட்டிற்கான அந்யோதயா திட்டம் தமக்கு உத்வேகம் அளிக்கும் திட்டமாக உள்ளது என்று கூறியுள்ள பிரதமர், ஏழை எளியோருக்கான பயன்கள் கிடைக்கப்பெற வேண்டும் என்பதில் தமது அரசு உறுதியுடன் செயலாற்றியதாக குறிப்பிட்டார்.

ஜன்தன் வங்கி கணக்கு, நேரடி பண பரிவர்த்தனை, தூய்மை பாரதம், வீட்டு வசதி, ஜல்ஜீவன் நீர் மேலாண்மை இயக்கம், ஆயுஷ்மான் பாரத் காப்பீடு போன்ற திட்டங்கள் மக்களின் வாய்ப்புகளுக்கான திறவுகோலாக அமைந்ததுடன் அவர்தம் மாண்பையும் உறுதிசெய்துள்ளதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

ஏழை எளிய மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தியதில் தொழில்நுட்பங்கள் முக்கிய பங்காற்றுவதாகவும் பிரதமர் கூறினார்.

உணவு தானிய திட்ட பயணம் ஒட்டுமொத்த மக்களின் ஆளுமையை உறுதி செய்து வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான கனவை முன்னெடுத்து செல்வதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

************

**அமித்ஷா**

ஏழை எளிய மக்களின் நலமே மத்திய அரசின் உயர் முன்னுரிமை என்று உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

நிதி பாதுகாப்பு, சுய வேலை வாய்ப்பு வங்கி வசதிகள் போன்றவை மூலம் கோடிக்கணக்கான மக்களை மத்திய அரசு இணைத்துள்ளதாக தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் நடைபாதை வியாபாரிகள், சிறு வணிகர்களுக்கான முத்ரா வங்கி கடன், வீட்டு வசதி திட்டம் போன்றவை மக்களின் மேம்பாட்டில் முக்கிய பங்காற்றியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

************

**சிவ்ராஜ்சிங் சவ்ஹான்**

நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் கோடிக்கணக்கான ஏழை மக்கள் பாதுகாப்பு, தன்னம்பிக்கை மதிப்புடன் வாழ்வில் முன்னேற்றம் கண்டுள்ளதாக மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் சமையல் எரிவாயு திட்டம், வீட்டு வசதி திட்டம், ஜல்ஜீவன் நீர் மேலாண்மை திட்டம், ஆயுஷ்மான் பாரத் காப்பீடு உணவு தானிய திட்டம், ஜன்தன் வங்கி கணக்கு திட்டம் உள்ளிட்ட பல்வேறு நல திட்டங்களால் ஏழை மக்களின் வாழ்வாதாரம் மேம்பட்டதாக அவர் எடுத்துரைத்தார்.

வேலை வாய்ப்புகள், நம்பிக்கை போன்றவற்றை முன்னெடுத்து செல்லும் புதிய அத்யாயம் ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் இந்த 12 ஆண்டுகளில் தோற்றுவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

************

**மாநிலங்களவை உறுப்பினர்**

நாட்டின் 10 மாநிலங்களில் காலியாக உள்ள 24 மாநிலங்களவை உறுப்பினர் பதவி இடங்களுக்கு வரும் 18ஆம் தேதி நடைபெறும் தேர்தலுக்கான வேட்பு மனுதாக்கல் இன்று நிறைவடைகிறது.

தமிழ்நாடு மஹராஷ்டிரா மாநிலங்களின் இரண்டு மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான இடைத்தேர்தலும் இத்துடன் நடைபெறுகிறது.

அஇஅதிமுகவின் திரு. சி.வி. சண்முகம் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதை தொடர்ந்து ஏற்பட்ட காலியிடத்திற்கு நடைபெறும் இடைத்தேர்தலில் த.வெ.க சார்பில் அக்கூட்டணியில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் கட்சியின் திரு.பிரவீன் சக்கரவர்த்தி போட்டியிடுகிறார்.

************

**ஆகாஷவாணி**

ஆகாஷ்வாணியின் 90ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி மத்திய அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற வலிமைமிகு ஒற்றுமை உணர்வுடன் ஆகாஷ்வாணி தேசம் முழுவதையும் இணைத்துள்ளதாக அமைச்சர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

1936ஆம் ஆண்டு ஜூன் 8ஆம் தேதி இந்திய ஒலிபரப்பு சேவை என்பது அகில இந்திய வானொலியாக உருப்பெற்றது.

நாட்டின் கலாச்சார தகவல் ஒலிபரப்பு வரலாற்றில் மிக முக்கியமான இந்த தினம் தொடங்கி தலைமுறைகளாக வானொலி மக்கள் சேவையாற்றி வருகிறது.

சுதந்திரத்திற்கு பின்னர் 1956-ம் ஆண்டு ஆகாஷ்வாணி என்ற பெயருடன் 591 நிலையங்கள் செயலாற்றுவதோடு, 23 மொழிகள் வாயிலாகவும், 146 வட்டார மொழிகளுடனும் வானொலி செயலாற்றி வருகிறது.

ஆகாஷ்வாணியின் வெளிநாட்டு சேவை பிரிவு நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் தமது சேவையை விரிவுபடுத்தி வெளிநாடுவாழ் இந்தியர்களுடனான தொடர்பை முன்னெடுத்து செல்கிறது.

மக்களின் மகிழ்ச்சிக்காக மக்களின் நலனுக்காக என்ற கோட்பாட்டுடன் ஆகாஷ்வாணியின் செய்தி பிரிவு ஒலிபரப்பு சேவை, நெறிமுறைகள் மற்றும் தரத்திற்கு ஏற்ப பல்வேறு தளங்களில் பல் வகை செய்திகளை மக்களிடையே கொண்டு சென்று இன்றியமையா சேவையாற்றி வருகிறது.

வானொலியின் முக்கியத்துவம் குறித்து தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியின் ஓய்வு பெற்ற அரசு ஊழியர் பிரிவு மாநில ஒருங்கிணைப்பாளரும், பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் முன்னாள் தலைமை இயக்குனருமான

முனைவர் மாரியப்பன் எமது செய்திப்பிரிவிடம் பேசுகையில்

************

**முதலமைச்சர்**

நார்வே செஸ் பட்டத்தை கைப்பற்றிய முதல் இந்தியர் என்ற வரலாற்று சாதனை படைத்த கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவிற்கு 50 லட்ச ரூபாய்க்கான காசோலையை முதலமைச்சர் திரு.விஜய் இன்று வழங்கி அவரை கவுரவித்தார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் செயல்படுத்தப்படும் தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவிதொகை திட்டத்தின் கீழ் இந்த ஊக்கத்தொகை பிரக்யானந்தாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது தமது வெற்றி கோப்பையை முதலமைச்சரிடம் காண்பித்து அவர் வாழ்த்து பெற்றார்.

மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜனா, உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

************

**ஷாஜகான்**

மத்திய அரசின் புதிய வக்ஃப் வாரிய சட்டம் தமிழகத்தில் அமல்படுத்தப்படமாட்டாது என மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு.ஷாஜகான் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இச்சட்டம் இதுவரை அமல்படுத்தவில்லை என்றார்.

************

**வினோத்**

குறுவை தொகுப்பு திட்டம் குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என்று மாநில வேளாண் அமைச்சர் திரு.வினோத் தெரிவித்துள்ளார்.

கும்பகோணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மும்முனை மின்சார பிரச்சனையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

************

**ரமேஷ்**

திண்டுக்கல் மாவட்டம் பழனி மின் இழுவை நிலைய பகுதிகளில் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளையும்,

பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.ரமேஷ் இன்று ஆய்வு செய்தார்.

காத்திருந்த மக்கள் கூட்டத்தில் பக்தர்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

நிலையத்தில் உள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தரத்தையும் உப்பு தன்மையையும் பரிசோதித்த அமைச்சர் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

************

**காலை உணவு**

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அருகே அயோத்திபட்டினம் ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் இன்று, காலைஉணவை உண்ட மாணாக்கருக்கு வாந்தி மயக்கம் ஏற்பட்டது.

இதனையடுத்து இம்மாணாக்கர் மேல் பள்ளிபட்டு வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதை தொடர்ந்து மாணவர்கள் நல்ல உடல் நலத்துடன் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

************

**நீலகிரி**

நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழையால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை சரிசெய்ய மாவட்ட நிர்வாகம் தயார்நிலையில் இருப்பதாக ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

முன்னதாக உதகை தாவரவியல் பூங்காவை உருவாக்கிய மெக் ஐவரின் 150ஆவது நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி அன்னாரது கல்லறைக்கு மாவட்ட ஆட்சியர் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

நீலகிரி மாவட்டத்தின் முக்கிய சுற்றுலா தலமாக விளங்கும் இந்ததாவரவியல் பூங்காவில் பல்வேறு நாடுகளை சேர்ந்த 50 வகையான மரங்களும், 250 விதமான மலர் செடிகளும் உள்ளன.

ஆண்டுக்கு சுமார் 25 லட்சத்திற்கு மேற்பட்ட சுற்றுலா பயணிகள் வருகை தருவது குறிப்பிடத்தக்கது.

************

**மணிமுத்தாறு**

மேற்குதொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக மணிமுத்தாறு அருவி களக்காடு தலையணையில் சுற்றுலா பயணிகள் குளிக்க 5ஆவது

நாளாக தடை நீடிப்பதாக எமது நெல்லை செய்தியாளர் தெரிவிக்கிறார்.

************

**தேனி**

தேனி மாவட்டம் கம்பத்திலிருந்து கேரளாவிற்கு செல்லும் கம்பம் மெட்டுசாலை பராமரிப்பு பணிகளுக்காக இன்றுமுதல் ஒருமாத காலத்திற்கு மூடப்படுவதாக நெடுஞ்சாலைத்துறை தெரிவித்துள்ளது.

இதையடுத்து போக்குவரத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

************

**கிரிக்கெட்**

சண்டிகடில் இந்தியாவிற்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான இன்று இரண்டாவது இன்னிங்ஸை ஃபாலோ ஆன் முறையில் தொடர்ந்து விளையாடும் ஆப்கானிஸ்தான் சற்றுமுன் **3** விக்கெட் இழப்பிற்கு **92** ரன் எடுத்திருந்தது.

முதல் இன்னிங்ஸ் ஸ்கோர்

இந்தியா **564** டிக்ளேர்ட்.

ஆப்கானிஸ்தான் **152**

************